# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ    அதிவிசேஷமானது

අංක 2053/39 - 2018 ජනවාරි 11 වැනි බ්‍රහස්පතින්දා- 2018.01.11

**2053/39 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 11 ஆந் திகதி வியாழக்கிழமை**

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 21/1978* (x)

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

25அ என்னும் பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல ஆகிய நான், 2007 ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும் பீவீ 17745 ஆம் பதிவிலக்கத்தைக் கொண்டதுமான கலம்போ இன்டர்நஷனல் நோட்டிக்கல் அன்ட் என்ஜினியரிங் கொலேஜ் (பிறைவேட்) லிமிட்டெட் தொடர்பில் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றுக் கொண்டு, சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டதும், 2017, நவெம்பர் 28 ஆந் திகதிய 2047/26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான அட்டவணையை, இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய, அதன் அட்டவணை II இன் முறையே நிரல் I இலும், நிரல் II இலுள்ள அதன் நேரொத்த பதிவிலும் காணப்படுகின்ற “விநியோக சங்கிலி முகாமைத்துவத்தில் கௌரவ முகாமைத்துவ இளமாணி” என்னும் பதிவை உடனடுத்துப் பின்னர் இதற்கான அட்டவணை II இன் முறையே நிரல் I இன் கீழும் II இன் கீழும் குறித்துரைக்கப்பட்ட பதிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையால் திருத்துகின்றேன்.

லக்ஷ்மன் கிரியெல்ல,
உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர்.

கொழும்பு
2018, சனவரி 10.


PG3867 - 17 (2018/01)

இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

## அட்டவணை I

நிபந்தனைகள்

கலம்போ இன்டர்நஷனல் நோட்டிக்கல் அன்ட் என்ஜினியரிங் கொலேஜ் (பிறைவேட்) லிமிட்டெட் ஆனது, இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட, பட்ட நிகழ்ச்சித்திட்டத்துக்காக மாணவர்களைச் சேர்க்கும் போது :

(அ) சுற்றுலாப் பயணத்துறை மற்றும் விருந்தோம்பல் முகாமையில் கௌரவ முகாமைத்துவ இளமாணி தொடர்பில் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் ஒரே தடவையில் ஏதேனும் பாடத்துறையில் மூன்று (03) 'S' சித்திகள் அல்லது அதற்குச் சமமான குறைந்த பட்ச நுழைவுத் தகைமைக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

(ஆ) ஆங்கிலத்தில் கௌரவ கல்வி இளமாணி தொடர்பில் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் ஒரே தடவையில் ('ஆங்கிலம்' மூன்று பிரதான பாடங்களில் ஒன்றாகுதல்) ஏதேனும் பாடத்துறையில் மூன்று (03) 'S' சித்திகள் அல்லது அதற்குச் சமமான குறைந்தபட்ச நுழைவுத் தகைமைக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

(இ) பௌதீக விஞ்ஞானத்தில் கௌரவ கல்வி இளமாணி தொடர்பில், க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் ஒரே தடவையில் இணைந்த கணிதம் அல்லது உயர் கணிதம், இரசாயனவியல், பௌதீகவியல், தகவல் மற்றும் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்பவியல் மற்றும் கணிதம் போன்ற பாடங்களிலிருந்து மூன்று (03) 'S' சித்திகள் அல்லது அதற்குச் சமமான குறைந்தபட்ச நுழைவுத் தகைமைக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

## அட்டவணை II

| நிரல் I<br>பட்டம் | நிரல் II<br>பட்டத்திற்கான சுருக்கீடு |
|---|---|
| சுற்றுலாப் பயணத்துறை மற்றும் விருந்தோம்பல் முகாமையில் கௌரவ முகாமைத்துவ இளமாணி | பிஎம்ஜிடி கௌரவ (சுற்றுலாப் பயணத்துறை மற்றும் விருத்தோம்பல் முகாமை) |
| ஆங்கிலத்தில் கௌரவ கல்வி இளமாணி | பிஈடி கௌரவ (ஆங்கிலம்) |
| பௌதீக விஞ்ஞானத்தில் கௌரவ கல்வி இளமாணி | பிஈடி கௌரவ (பௌதீக விஞ்ஞானம்) |

01- 742

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.